

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட தும்மலப்பட்டி ஊராட்சியில் 110/22 கி.வோ துணை மின்நிலையத்திற்கு 15.12.2025 அன்று அடிக்கல் நாட்டினார். அருகில் பழனி வருவாய் கோட்டாட்சியர் இரா. கண்ணன், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் சஞ்சைகாந்தி, திண்டுக்கல் மேற்பார்வை பொறியாளர் திருமதி சாந்தி, செயற்பொறியாளர்கள் கமலக்கண்ணன், சந்திரசேகரன் உட்பட பலர் உள்ளனர்.



திருச்செந்தூர் வட்டம் ஆழ்வை கிழக்கு ஒன்றியம் ஜெ.ஜெ.நகரில் பல் நோக்கு கட்டிடத்தினை தமிழக மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் ஏ.பி.சதீஷ்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணிய அமைப்பாளர் ஜனகர், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், வழக்கறிஞர் அணி கிருபாகரன், கபடி கந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


### கைத்தறி நெசவாளர்கள் வசிக்கும் பகுதிக்கு

# தார்ச்சாலை - பேவர்பிளாக் சாலை - தெருவிளக்கு வசதி உடனடியாக செய்து கொடுக்கப்படும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி

திண்டுக்கல் டிச - 18-

ஆத்தூர் தொகுதியில் எனக்கு 36 வருடங்களாக ஆதரவு அளித்து வரும் சின்னாளபட்டி கைத்தறி நெசவாளர்களை என்றும் மறக்கமாட்டேன் என்று மா.பொ.சி. நெசவாளர் காலனியில் நடைபெற்ற நியாயவிலைக் கடை திறப்புவிழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு, கைத்தறி நெசவாளர்கள் வசிக்கும் பகுதிக்கு தார்ச்சாலை வசதி, பேவர்பிளாக் சாலை வசதி, தெருவிளக்கு வசதி உடனடியாக செய்து கொடுக்கப்படும் உறுதி அளித்தார்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட சீவல்சரகு ஊராட்சி பகுதியில் மா.பொ.சி. நெசவாளர் காலனி, கலைமகள் நெசவாளர் காலனி, கமலா நேரு நெசவாளர் காலனி உட்பட மூன்றுக்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் காலனிகள் உள்ளன. இங்கு சின்னாளபட்டியைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் உள்ளன. இவர்கள் தங்களது ரேஷன் பொருட்களை அருகில் உள்ள ஜெ.புதுக்கோட்டை கிராமத்திற்கு சென்று வாங்கி வந்தனர்.

சுமார் 2 கி.மீ. தூரம் சென்று ரேஷன் பொருட்களை வாங்கி வருவதாகவும், தங்கள் பகுதியில் பகுதி நேர நியாய விலைக்கடை திறந்து வைக்க வேண்டுமென்று அமைச்சரிடம் இரு தினங்களுக்கு முன்பு மனு கொடுத்தனர். உடனடியாக கைத்தறி நெசவாளர்களின் கோரிக்கையை ஏற்று அப்பகுதியில் பகுதி நேர நியாய விலைக்கடை திறக்க அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவிட்டார். 11.12.2025 அன்று பகுதி நேர நியாய விலைக்கடை திறப்புவிழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி நியாய விலைக் கடையை திறந்து வைத்து கைத்தறி நெசவாளர்களுக்கு ரேஷன் பொருட்களை விநியோகம் செய்த பின்பு, நெசவாளர்கள் மத்தியில் பேசும்போது கைத்தறி நெசவாளர்களுக்கும், தி.மு.க.விற்கும் இருக்கும் உறவு இன்று, நேற்றல்ல. 1965ம் ஆண்டே கைத்தறி நெசவாளர்களுக்காக அறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும் அண்ணா சாலையில் கைத்தறி துணிகளை தலையில் சுமந்து விற்பனை செய்து கைத்தறி நெசவாளர்களுக்காக தங்களது ஆதரவைத் தெரிவித்தனர். 1989ம் ஆண்டு ஆத்தூர் தொகுதியில் நான் முதன்முதலாக போட்டியிட்டபோது எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் சின்னாளப்பட்டி கைத்தறி நெசவாளர்கள். அவர்களை உயிருள்ளவரை மறக்க மாட்டேன். சின்னாளப்பட்டி வாக்கு எண்ணிக்கைக்கு பின்பு தான் கூடுதல் வாக்கு பெற்று நான் வெற்றிபெற முடிந்தது. இங்கிருக்கும் கைத்தறி நெசவாளர்கள் சின்னாளப்பட்டியைவிட்டு பிரிந்து அருகில் உள்ள கிராம ஊராட்சிக்கு வந்து விட்டோம் என்று நினைக்க வேண்டாம். விரைவில் சின்னாளப்பட்டியுடன் இந்த கிராமமும் இணைந்து விடும். அந்த அளவிற்கு நகரங்கள் வளர்ச்சி பெற்று வருகிறது. இங்கு வரும் போதுதான் சாலை வசதி, தெருவிளக்கு வசதி குறைவாக இருப்பதை தெரிந்து கொண்டேன். ஒரு வார காலத்திற்குள் கைத்தறி நெசவாளர்கள் வசிக்கும் பகுதியில் முறையான தெருவிளக்கு வசதி, சாலை வசதி, குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த நெசவாளர்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அதன்பின்னர் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரம் காக்க இப்பகுதியில் என்னனென்ன வசதிகள் செய்து கொடுக்கமுடியுமோ அவை அனைத்தையும் செய்து கொடுப்பேன், இது உறுதி என்றார். நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் இராகவ் பாலாஜி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்திய மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், துணைப்பதிவாளர் பொது விநியோகத்திட்டம் எஸ்.டி.கார்த்திகேயன், சரக துணைப் பதிவாளர் கார்த்திக் கௌதம், திண்டுக்கல் மாவட்ட மொத்த கூட்டுறவு பண்டக சாலை செயலாட்சியர் கனகராஜ்ஆத்தூர் வட்டார பொதுவிநியோகத் திட்ட கூட்டுறவு சார்பதிவாளர் அறிவழகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேஸ், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், மேற்கு ஒன்றிய துணை செயலாளர்கள் கருத்தராஜா, கலாபச்சை, பொருளாளர் தொப்பம்பட்டி கருப்பையா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் வசந்தகுமார், இராஜகணேஷ், சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பொறுப்பு குழு உறுப்பினர்கள் கீர்த்தனா, மெடிக்கல் கோபி, முத்துவேல் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் கள அலுவலர்; அம்பிகேஸ்வரன், பித்தளைப்பட்டி கூட்டுறவு சங்க செயலாளர் சுப்பையா, காந்திகிராம கூட்;டுறவு சங்க செயலாளர் மஞ்சமாதா, கூட்டுறவு விற்பனையாளர்கள் பாலாஜி, இன்பராஜ், முருகவேல், அகஸ்டீன், யுவராஜ் உட்பட தி.மு.க. நிர்வாகிகள், இளைஞரணியினர் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி புதூர் பகுதியில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பகுதி கழக செயலாளர் என்.எம்.புண்ணியமூர்த்தி முன்னிலையில் வி.வேலுச்சாமி, (மாவட்டச் செயலாளர் தணிக்கை குழு உறுப்பினர்) தலைமை தாங்கி துவக்கி வைத்தார். நிகழ்ச்சி ஏற்பாடு 10வது வட்டச் செயலாளர் வி.சி.மாதவன் 74வது பாகம் எம்.ஆர்.செந்தில்குமார் (BLA2)நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் அக்ரி கணேசன் (தீர்மான குழு செயலாளர்). இளைஞர் அணி நிர்வாகிகள் கேசவன் ,பிரசன்னா ,காளி, சுரேஷ்பாபு, முத்துமாரி, தேவி,பிரேமலதா, தீபா, சுற்றுச்சூழல் அணி தீபக்,அயலக அணி சேக் அப்துல்லா, நரசிம்மன், ஆழ்வார்,பிரபாகரன், மற்றும் மகளிர் அணி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை நடைபெற்றது. கூட்டத்தில் எம்.மதியழகன், பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், குமரி ஸ்டீபன், இ.ஜவகர், என். பி.துரை, த.ஜீவா, எம்.சேக்மீரான் உட்பட பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 2 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# திருத்த மசோதா, இந்திய காப்பீட்டுத்துறைக்கு எதிராக இருக்கிறது!

## மக்களவையில் தமிழச்சிதங்கபாண்டியன் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச. 18-

திருத்த மசோதா இந்திய காப்பீட்டுத்துறைக்கு எதிராக இருப்பதால், அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கூறினார்.



மக்களவையில் ‘சப்கா பீமா சப்கி ரக்ஷா (காப்பீட்டுச் சட்டங்கள் திருத்தம்) மசோதா, 2025 அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை தி.மு.க. எம்.பி.க்கள் எதிர்த்தனர். தென்சென்னை தொகுதி எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் இந்த திருத்தத்துக்கு எதிராக பேசியதாவது:

மசோதாவின் பிரிவு 2 சிஐ திருத்துவது, இந்தியாவில் காப்பீட்டுத் துறையில் வெளிநாட்டு காப்பீட்டு நிறுவனங்களுக்கு முழுமையான அதிகாரத்தை வழங்குவதாகும். இது தேசத்தின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு எதிரானது மற்றும் அரசியலமைப்பு விதிகளின் மீறலாகும். மசோதாவின் பிரிவு 2 சி.ஏ.ல் உள்ள உட்பிரிவுகள் ஏ மற்றும் பிஐச் சேர்ப்பது தேசிய காப்பீட்டு நிறுவனங்களின் நலன்களுக்கு எதிரானது. ஏனெனில் (ஏ) சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம், 2005இன் விதிகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச நிதிச் சேவை மையங்கள் உள்பட எந்தவொரு சிறப்புப் பொருளாதார மண்டலத்திலும் உள்ள ஒரு காப்பீட்டாளர் அல்லது காப்பீட்டு இடைத்தரகருக்கு இது பொருந்தாது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம், 2005இன் விதிகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச நிதிச்சேவை மையங்கள் உள்பட எந்தவொரு சிறப்புப் பொருளாதார மண்டலத்திலும் உள்ள காப்பீட்டாளர் அல்லது காப்பீட்டு இடைத்தரகருக்கு, அறிவிப்பில் குறிப்பிடப்படக்கூடிய விதிவிலக்குகள், மாற்றங்கள் மற்றும் தழுவல்களுடன் இது பொருந்தும். இது காப்பீட்டுத் துறையில் 100 சதவீதம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழிவகுக்கிறது. இது இந்திய காப்பீட்டுத் துறைக்கு எதிராக இருப்பதால், இது ஏற்றுக்கொள்ள முடியாதது. மேலும் நியாயப்படுத்த முடியாதது.

மேற்கூறிய ஆட்சேபனைகளின் பார்வையில், இந்த மசோதா நாடாளுமன்றத்தின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டதாகவும், இந்திய அரசியலமைப்பை மீறுவதாகவும் இருப்பதால், ஆரம்ப நிலையிலேயே நிராகரிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி தொகுதி டி சுப்புலாபுரம் கிராமத்தில் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் தலைமையில் என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி மற்றும் தமிழ்நாடு தலைகுனியாதுகூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம். மற்றும் கிளை கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், மருங்கூர் பேரூர் பகுதியில் உள்ள த.வெ.க இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள் உட்பட 75க்கும் மேற்பட்டோர் ஆகாஷ் தலைமையில், மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். மாற்றுக் கட்சியில் இருந்து வந்தவர்களை மேயர் ரெ.மகேஷ் சால்வை அணிவித்து வரவேற்றார். நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், எம்.மதியழகன், மகேஷ், ஆன்றோ போஸ்கோ உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், புதூர் அரசு மேலநிலைப்பள்ளியில பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவ – மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்க்கண்டேயன் வழங்கினார். நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் பொறுப்பு கிருஷ்ணமூர்த்தி, புதூர் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், ராதாகிருஷ்ணன், மும்மூர்த்தி, சின்னமாரிமுத்து, ராமசுப்பு, அன்புராஜன், இமானுவேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் பாக எண் 132 புது கும்மிடிப்பூண்டி ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஆலோசனைபடி நடைபெற்றது இதில் ஒன்றிய கழக செயலாளர் கி.வேணுஆனந்த் பரப்புரை மேற்கொண்டு திமுக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கி சிறப்புரையாற்றினார்.